# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்.

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் 11 | கத்தோலிக்கத் திருமறை (R.C) | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ............................................................

## பகுதி – I

**கவனிக்க.**

- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

1) இஸ்ரயேல் மக்கள் வழிபாட்டின்போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள், ஒழுங்குகள் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய நூல்
   1. விடுதலைப் பயணம் 2. தொடக்க நூல்
   3. லேரியர் நூல் 4. எண்ணிக்கை

2) கீழே தரப்பட்டுள்ள நூல்களில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் இணைத்திருமுறை நூல் ஒன்று எது?
   1. யோபு 2. எசாயா 3. யூதித்து 4. ஒபதியா

3) இறைவன் அழைத்த பொழுது இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும் எனக் கூறிய இறைவாக்கினர்
   1. எரேமியா 2. எசக்கியேல் 3. தானியேல் 4. எசாயா

4) மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட இடம்
   1. உரோமை நகர் 2. பலஸ்தீனா 3. எபேசு 4. பிலிச்பி

5) பத்து பெருந்துன்பங்களில் ஏழாவது
   1. கால்நடை சாவு 2. கல்மழை
   3. ஈக்களின் பெருக்கம் 4. தலையன் சாவு

6) இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையின் வெளிஅடையாளம் எது?
   1. வானவில் 2. விருத்த சேதனம் 3. பத்துக்கட்டளை 4. கடத்தல்

7) மரியாயின் சேனை என்ற அமைப்பை ஆரம்பித்தவர்
   1. மக்ஸிமிலியன் கோல்பே 2.பிராங்டப்
   3.புனித ஜோசவ்வாஸ் 4. புனித அன்னை தெரேசா

8) “ரதா” என்ற எபிரேயச் சொல்லின் பொருள்
1. பாதுகாத்தல் 2. பராமரிப்பு 3. பயிரிடுதல் 4. சமாதானம்

9) திருவெளிப்பாட்டு இலக்கியத்தில் வெள்ளை நிறம் குறிப்பது?
   1. வெற்றி 2. யுத்தம் 3. பஞ்சம் 4.மரணம்

10) பேதுருவின் அருளுரையின் பின் மனம்மாறி திருமுழுக்குப் பெற்றோர் எத்தனை பேர்
   1. 5000பேர் 2. 3000பேர் 3. 2000பேர் 4. 1000பேர்

11) பன்னிரெண்டு திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியானவர் யார்?
   1. தூய பேதுரு 2. தூய யோவான்
   3. தூய யாக்கோபு 4. தூய அந்திரேயா

12) திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் கத்தோலிக்க திருச்சபையின் எத்தனையாவது திருத்தந்தை ஆவார்?
   1. 260 2. 265 3. 266 4. 250

13) ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற விரும்பும் ஒருவர் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
   A- ஆன்மீக பரிசோதனையில் ஈடுபடல்
   B- மீண்டும் பாவம் செய்யாதிருக்கத் தீர்மானித்தல்
   C- செய்த பாவங்களை வெளிப்படுத்துதல்
   D- செய்த பாவங்களுக்காக மனம் வருந்துதல்
   E- தரப்படும் தண்டனைகளை நிறைவேற்றிக் கொள்ளல்

இப்படிமுறைகளை சரியான ஒழுங்கில் கொண்ட தெரிவு
   1. ABCDE 2. ADBCE 3. DCBAE 4. EDCBA

14) கிறிஸ்தவராக வாழ்வை ஆரம்பிப்பதற்குத் தேவையான அருளடையாளங்கள்
   1. திருமுழுக்கு, நற்கருணை, நோயில் பூசுதல்
   2. நற்கருணை, உறுதிப்பூசுதல், மெய்விவாகம்
   3. திருமுழுக்கு, நற்கருணை, உறுதிப்பூசுதல்
   4. உறுதிப்பூசுதல், நற்கருணை, குருத்துவம்

15) புனித பிரான்சிஸ் அசீசியாரின் செபம்
   1. தந்தையே, என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்.
   2. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.
   3. வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்களை செய்துள்ளார்.
   4. ஆண்டவரே, உமது அமைதியின் கருவியால் என்னை உருவாக்கிடுவீர்.

16) “முழு மனிதகுலமும் ஒரே மக்களாவர்” இந்த சகோதரத்துவ இணைப்பை ஏற்று வாழ எமக்கு அழைப்பு விடுக்கும் செபம்
   1. காலைச்செபம் 2. இயேசு கற்பித்த செபம்
   3. கிருபை தயாபரத்து செபம் 4. மாலைச்செபம்

17) குருக்களின் சில பணிகள்
   A- அரசியல் உறுதிப்பாட்டை நிலைநாட்டல்
   B- மக்கள் மத்தியில் இயேசுவின் பிரதிநிதியாகச் செயலாற்றுதல்
   C- திருப்பலி ஒப்புக் கொடுத்தல்
   D- மறைமாவட்டத்தை நிர்வகித்தல்
   மேற்கூறியவற்றில் சரியான தகவல்கள்

   1. AB 2. AC 3. BC 4. BD

18) திருவழிபாட்டின் முக்கியமான பிரிவுகள்
1. திருப்பலி, அருளடையாளம், திருப்புகழ்மாலை
2. திருப்பலி, குணமளிக்கும் ஆராதனை, திருப்புகழ்மாலை
3. இறைவார்த்தைப்பகுதி, காணிக்கை ஒப்புக்கொடுத்தல், விசுவாசிகள் மன்றாட்டு
4. திருப்புகழ்மாலை, காணிக்கை, செபமாலை சொல்லுதல்'

19) குருத்துவத்தின் மூன்று நிலைகள்
1. அரச- குருத்துவ- இறைவாக்குப்பணி    2. இல்லற- துறவற- குருத்துவம்
3. ஆயர்- குரு- திருத்தொண்டர்    4. ஆயர்- கருதினால்- திருத்தந்தை

20) பத்துக் கட்டளைகளைப்பற்றி எழுதப்பட்டுள்ள இருநூல்கள்
1. தொடக்கநூல், விடுதலைப்பயணம்    2. விடுதலைப்பயணம், இணைச்சட்டம்
3. இணைச்சட்டம், திருப்பாடல்    4. லேசியர், இணைச்சட்டம்

21) புனித மரியகொறற்றியை பாவத்திற்கு உட்படுத்திக்கொள்ள முயற்சித்தவர் செய்த செயல் பத்துக்கட்டளைகளின் ................. எதிரானது. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
1. முதலாவது    2.நான்காவது    3. ஆறாவது    4. பத்தாவது

22) சீலன் முழுநாளும் கஷ்டப்பட்டு தயாளனின் தோட்டத்தில் வேலை செய்தபோதும், முதலில் பொருந்திய ஊதியம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இச்செயலில் தயாளன்
1. ஏழாம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
2. நான்காம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
3. இரண்டாம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
4. முதலாம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.

23) இயேசு சபை மறைபோதகர்கள் இலங்கைக்கு வருகைதந்த ஆண்டு
1. 1543    2. 1602    3. 1605    4. 1606

24) இலங்கைக் கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை
1. யோசவ்வாஸ்    2. யாக்கோமே சொன்சால்செஸ்
3. கிறிஸ்தோபர்வாஸ்    4. மேதகு தோமஸ் கருதினால் குரே

25) மட்டக்களப்பு மறைமாவட்டம் உருவாகிய ஆண்டு
1. 2015    2. 2012    3. 2017    4. 2014

26) இயேசு சீடர்களின் காலடிகளைக் கழுவிய நிகழ்வைக் குறிப்பிடும் நற்செய்தி
1. மத்தேயு    2. மாற்கு
3. லூக்கா    4. யோவான்

27) நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரேயொரு அருங்குறி
1. கைசூம்பியவரை குணமாக்கியமை    2. இலாசரை உயிர்ப்பித்தமை
3. அப்பங்களை பலுகச் செய்தமை    4.முடக்குவாதமுற்றவரை குணமாக்கியமை

28) பொதுக்காலம் எத்தனை வாரங்களைக் கொண்டுள்ளது.
1. 20    2. 14    3. 34    4. 52

29) தவக்காலத்தில் குரு அணியும் ஆடையின் நிறம்
1. ஊதா    2. வெள்ளை    3. சிவப்பு    4. பச்சை

30) 1917ஆம் ஆண்டில் மரியன்னை காட்சி கொடுத்தது
1. இந்தியாவில் வேளாங்கண்ணியிலாகும்.
2. பிரான்சில் லூர்து நகரிலாகும்.
3. இத்தாலியில் லன்சியானோ நகரிலாகும்.
4. போர்த்துக்கல்லில் பாத்திமா நகரிலாகும்.

31) குருத்துவத்தின் முழுநிறைவு உரிமையாவது
1. திருத்தொண்டர் நிலைக்காகும் 2. குருத்துவ நிலைக்காகும்
3. ஆயர் நிலைக்காகும் 4. மடாதிபர் நிலைக்காகும்

32) எதிர்நோக்கிற்கு எதிரான பாவம் ஆவது
1. மிதமிஞ்சிய எதிர்நோக்கு 2. கிறிஸ்துநாதரிடமிருந்துவிலகிச்செல்லல்
3. விண்ணரசை இழத்தல் 4. தூய ஆவியின் கொடையை இழத்தல்

33)“பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்.” தூயபவுல் இவ்வாறு கூறுவது
1. பிலிப்பியர் சபைக்கு 2. எபேசியர் சபைக்கு
3. உரோமையர் சபைக்கு 4. கொலோசையர் சபைக்கு

34) பொய் சொல்வது சிறியதொரு செயலாக விளங்கினாலும் அது மாபெரும தவறு என்பது வெளிப்படுத்தப்படுவது
1. முன்மதியோடு செயற்பட்ட களஞ்சியப் பொறுப்பாளரின் உவமையின் மூலம்
2. பரியபேனும் ஆயக்காரனும் உவமை மூலம்
3. அனனியா மற்றும் சப்பிராணின் மரணத்தின் மூலம்
4. அத்திமரத்தின் உவமையின் மூலமாகும்

35) இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் தமது நற்செய்தியை ஆரம்பிப்பவர்
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவாஸ்

36) திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் குருவின் பாரம்பரியத்திற்குரிய நிகழ்வு எது?
1. காயீன் ஆபேலின் சம்பவம் 2. படைப்பின் இரண்டாவது கதை
3. ஆதாம், ஏவாளின் பாவம் 4. நோவாவுடன் உடன்படிக்கை

37) துறவற வார்த்தைப்பாடுகள் மூன்றும்
1. ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு 2. குழுவாழ்வு, செபவாழ்வு, பணிவாழ்வு
3. ஒருமை, கட்டவிழாமை, கற்பு 4. ஏழ்மை, ஒருமை, தாழ்மை

38) பின்வரும் செயல்களில் ஆன்மாவைச் சேர்ந்த இரக்கச் செயலாக அமைவது
1. பசித்தோருக்கு உணவு கொடுப்பது 2. அடிமைகளை விடுவிப்பது
3. இறந்தோரை அடக்கம் செய்வது 4. பிறருக்காக செபிப்பது

39) குறித்த நாட்களில் சுத்தபோசனமும், ஒருசந்தியும் கடைப்பிடிப்பது பற்றிக் கூறப்படுவது
1. திருச்சபை சட்டக் கோவையிலாகும் 2. தூய லூக்கா நற்செய்தியிலாகும்
3. பத்துக்கட்டளைகளில் ஆகும் 4. உரோமையர் திருமுகத்திலாகும்

40) திருப்பாடல்களில் சங்கீதங்கள் ஊடாக எவ்லோரும் குழுவாக ஒன்றித்து நடாத்திய புகழ்ச்சி மன்றாட்டு
1. நற்கருணை மன்றாட்டு 2. திருப்புகழ்மாலை
3. மரியாவின் புகழ்ச்சிப்பாடல் 4. செக்கரியாவின் புகழ்ச்சிப்பாடல்

( 40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய வினாக்களில் இருந்து நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கியத்தையும், புதிய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கியத்தையும் தருக.
2. பவுலின் அறிவுரைப்படி அவரது சீடரால் எழுதப்பட்ட திருமுகங்கள் இரண்டு தருக?
3. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் இரண்டு தருக?
4. திருத்தொண்டராக இருப்பதற்கான தகுதிகள் இரண்டு தருக?
5. புனித யோசவ்வாஸ் செய்த புதுமைகள் இரண்டு தருக?
6. யாவே மரபுக்குரிய சம்பவங்கள் இரண்டு தருக?
7. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பண்புகள் இரண்டு தருக?
8. ஏனைய படைப்புக்களை விட மனிதனிடம் காணப்படும் விசேட பண்புகள் இரண்டு தருக?
9. இஸ்ராயேலர் பார்வோன் மன்னனுக்காக கட்டிய இரண்டு நகரங்களும் எவை?
10. சமூக அருளடையாளங்கள் இரண்டையும் தருக?

(10x2=20 புள்ளிகள்)

02) 1. தூயபவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் இரண்டு தருக?
2. தூயபவுல் தன் கைப்பட எழுதிய திருமுகங்கள் மூன்று தருக?
3. தூயபவுலின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

03) 1. ஞானம் என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச்சொல் எது?
2. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் மூன்று தருக?
3. உமது வாழ்வில் ஞானமுள்ள விதத்தில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

04) 1. திருமுழுக்கு வழியாக நீர் பெற்றுக் கொண்ட வரங்கள் இரண்டு தருக?
2. ஞானப் பெற்றோராக இருப்பதற்கான தகுதிகள் மூன்று தருக?
3. இறையருள் நிறைந்த பிள்ளையாக சமுதாயத்தில் உம்மால் ஆற்றக்கூடியசெயல்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

05) 1.இயேசு கற்பித்த செபத்தில் காணப்படும் விசேட பண்புகள் இரண்டு தருக?

2.யோவான் 17ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் இயேசுவின் வேண்டலில் அடிப்படைப்பண்புகள் மூன்று தருக?

3.அடிக்கடி செபிப்பதன் முக்கியத்துவத்தைக் காட்டிய இயேசுவின் படிப்பினையின்படி உமது அன்றாட வாழ்வை அமைத்துக் கொள்ளும் விதத்தை ஐந்து காரணிகள் தந்து எடுத்துக் காட்டுக?

(2+3+5=10புபுள்ளிகள்)

06) 1. பத்துக்கட்டளைகளில் அடங்கியுள்ள பிரதான படிப்பினைகள் இரண்டையும் தருக?

2. ஐந்தாம் கட்டளைக்கு எதிரான செயல்கள் மூன்று தருக?

3. பத்துக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவனாகிய நீர் பின்பற்ற வேண்டிய நற்பண்புகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

07) .பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

1. அன்னை தெரேசாவின் இரக்கத்தின் வாழ்க்கை
2. மோசேயின் அழைப்பும் பணியும்
3. துறவற வாழ்வு
4. திருத்தொண்டரின் கடமைகளும், பொறுப்புக்களும்

(5+5=10 புள்ளிகள்)